கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.156/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 13.07.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 13.07.2026 | சாட்சி | பி. வா.சா.3 |
| பெயர் | நந்தகுமார் | வயது | 44 |
| தந்தை பெயர் | கிருஷ்ணமூர்த்தி | கிராமம் | சி. முட்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனது தந்தையின் பெயர் கிருஷ்ணமூர்த்தி. எனது தந்தை கிருஷ்ணமூத்திக்கு எத்தனை மகன் மற்றும் மகள்கள் என்றால் 2 மகள்கள் மற்றும் 2 மகன்கள். அவர்கள் மாலா, சித்திரா, நான் மற்றம் ராஜா. எனது தந்தை தற்போது உயிருடன் இல்லை. அவர் 2012 ல் இறந்துவிட்டார். அவர் இறந்தபின்னிட்டு சொத்துக்களை நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோம். பாகம் பிரித்திக்கொண்டதற்கான பத்திரம் எழுதி பதிவு செய்தோம். எந்த தேதியில் குறிப்பாக பத்திரப்பதிவு செய்து கொண்டோம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பாகத்தின் வாயிலாக எனக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் 5 சென்ட் மற்றும் 71/2 சென்ட். அவையிரண்டும் புஞ்செய் நிலங்கள். அதில் நான் பயிர்செய்யவில்லை என்றால் சரிதான். 5 சென்ட் நிலத்தில் RCC வீடு உள்ளது. எனது தந்தை அங்கு தான் இருந்தார் என்றால் சரிதான். 5 சென்ட்டுக்கு தென்புறம் யார் இருந்ததார் என்றால் முத்துகிருஷ்ணன் இருந்ததார். முத்துகிருஷ்ணனின் இடத்திற்கு தென்புறம் யார் இருந்தார் என்றால் மாதவன் 10 சென்ட் இடத்தில் இருந்தார். மாதவனின் 10 சென்ட் இடத்தில் காலி மனையாக உள்ளது.

2. மாதவன் இடத்திற்கு தென்புறம் யார் நிலம் உள்ளது என்றால் என்னுடைய இடம் உள்ளது. அதன் விஸ்திரனம் 71/2 சென்ட். இந்த 71/2 சென்ட்க்கும் தென்புறம் கஸ்தூரியின் வீடு அமைந்துள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட 71/2 சென்ட் இடமானது காலி மனையாக உள்ளது. இந்து சொத்து சம்பந்தமாக எனக்கும் தியாகராஜனுக்கும் இடையே வழக்கு உள்ளது என்றால் சரிதான். எனது 5 சென்ட் மனைக்கும் தெற்கே அமைந்துள்ள முத்துகிருஷ்ணனின் இடம் காலி மனையாக உள்ளது. முத்துகிருஷ்ணனுக்கு அந்த இடம்

எவ்வாறு பாத்தியம் என்றால் அவர் சுலோச்சனாவிடம் இருந்து கிரயம் வாங்கினார். அவர் கிரயம் வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் கிரயம் வாங்கினார் என்றால் தெரியாது. முத்துகிருஷ்ணன் அவர் கிரயம் வாங்கிய விவரத்தை என்னிடம் தெரிவித்ததன் பேரில்தான் அறிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். முத்துகிருஷ்ணன் கிரயம் வாங்கிய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். முத்துகிருஷ்ணனுக்கு கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது. 2 ஏக்கர் அளவிற்கு அவரின் பெயரில் நிலங்கள் அமைந்துள்ளது. மனைக்கட்டு உள்ளதா என்றால் இருந்தது ஆனால் அதை விற்றுவிட்டார்.

3. மனைக்கட்டின் சர்வே எண் மற்றும் விஸ்திரனம் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் குடிசை வீட்டில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். அவரின் குடிசை வீடானது புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. பட்டா இடத்தில் தான் உள்ளது. பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது அந்த இடத்தை ரோடு போடுவதற்காக எடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். ரோடு போடுவதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. அதற்கு நஷ்டஈடு தொகையும் வழங்கினார்கள். அவருக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் நிலம் தற்போதும் உள்ளதா என்றால் உள்ளது. அதை வைத்துதான் அவர் ஜிவனாம்சம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

4. எனது வீட்டிற்கும் தென்புறம் வழக்கு சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும் தென்புறம் மாதவனின் இடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். சுலோச்சனாவிற்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் அவரின் கணவர் வெளிநாடு சென்று திரும்பி வராத காரணத்தினால் ஒரு நபர் அவருக்கு சொத்தை எழுதிக்கொடுத்தார். அவ்வாறு எழுதிக்கொடுத்த பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அது என்ன பத்திரம் என்றும் எனக்கு தெரியாது. முத்துகிருஷ்ணன் வாங்கிய பிறகுதான் எனக்கு தெரியும்.

5. முத்துகிருஷ்ணன் வழக்கு சொத்தை அனுபவிப்பதாக வாதியின் பெயரிலுள்ள விரோதத்தின் காரணமாக பொய்ச்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உஷாராணி என்பவர் எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் இரண்டு மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். சுலோச்சனா அண்ணன் மனைவி உஷாராணி என்றால் சரிதான். உஷராணி என்பவர் சுலோச்சனா, வீரராகவன் மற்றும் நடனசபாபதி பெயரில் வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவ்வழக்கான உஷாராணிக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. உஷாராணியின் மகன் மணிவண்ணன் தேவராஜ் மற்றும் சுலோச்சனா பெயரில் வழக்கு தொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

5. எனது ஊரில் சீமான் என்ற நபர் உள்ளார். தியாகராஜன் என்பவர் சீமான் பெயரில் வழக்கு தொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது ஊரில் ராஜராம் மற்றும் ராமதாஸ் உள்ளனர். அவர்கள் தியாராஜன், சாராதாம்பாள் மற்றும் திரிபுரசுந்தரி பெயரில் வழக்கை தொடுத்தார் என்றால் சரிதான். ராஜராம் மற்றும் ராமதாஸ் தாக்கல் செய்த வழக்கு அவர்களுக்கு விரோதமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சச்சிதானந்தம் என்பவர் எனது ஊரில் உள்ளார். தியாகராஜன் எவ்வளவு ஆண்டுகளாக எனது ஊரில் உள்ளார் என்றால் அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் இல்லை. திருமணமான பின்புதான் இங்கு வந்தார். சுமார் 30 ஆண்டுகாலமாக உள்ளார்.

6. முத்துகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் தனக்கு நிலம் பாத்தியம் இல்லை என்று கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அவருக்கு 2 ஏக்கர் நிலமும் சுலோச்சனாவிடம் இருந்து வாங்கிய 5 சென்ட் நிலமும் உள்ளது. முத்துகிருஷ்ணனுக்கு அவரது மனைவிக்கும் வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். முத்துகிருஷ்ணன் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் எனது ஊரை சேர்ந்தவர். அசல் வழக்கு எண்.14/2016 ல் என்னை விசாரித்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் முத்துகிருஷ்ணனுக்கு அரசு புறம்போக்கு இடத்தில் தான் நிலம் உள்ளது என்றும், பட்டா இடம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. முத்துகிருஷ்ணன் சுலோச்சனாவிடம் இருந்து கிரயம் வாங்கியதாக கூறும் கிரயத் தொகை எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது.

7. முத்துகிருஷ்ணனின் மனைவியின் பெயர் எனக்கு தெரியாது. அவரின் பெயரில் சொத்து உள்ளதா என்றால் இல்லை. முத்துகிருஷ்ணனுக்கு சொத்துக்கள் இல்லை என்று சாட்சியம் அளித்துவிட்டு தற்போது இருப்பதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பட்டா யாரின் பெயரில் உள்ளது என்றால் முத்துகிருஷ்ணன் பெயரில் உள்ளது. பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பட்டா எண் தெரியுமா என்றால் நான் மறந்துவிட்டேன். வழக்கு சொத்திற்கு உண்டான வருவாய்த்துறை ஆவணங்களான சிட்டா மற்றும் அடங்கல் யாரின் பெயரில் உள்ளது என்றால் நான் பார்த்துள்ளேன் தற்போது ஞாபகம் இல்லை. வருவாய்த்துறை ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர் என்னிடம் காண்பித்த பட்டா மற்றும் பத்திரத்தை தான் நான் பார்த்துள்ளேன். என்ன பத்திரம் என்றால் எனக்கு தெரியாது. அதில் 500 மற்றும் 100 ரூபாய் முத்திரைதாளில் எழுப்பட்ட பத்திரம்.

8. என்ன காரணத்திற்காக என்னிடம் பத்திரத்தை காண்பித்தார் என்றால் ஒரே ஊரை சார்ந்தவர் என்பதாலும், பக்கத்து நிலத்துகாரர் என்பதாலும் என்னிடம் காண்பித்தார். எந்தவருடத்தில் என்னிடம் காண்பித்தார் என்றால் சாட்சி 1918 என்று கூறிவிட்டு பின்னர் 2018 என்று கூறினார். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் தியாகராஜனின் பெயரிலுள்ள விரோதத்தின் காரணமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. வழக்கு சொத்தானது எப்பொழுதும் முத்துகிருஷ்ணனின் அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும் தியாகராஜனின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் மரங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அவை தென்னை -3, சப்போட்டா -1 மற்றும் கறிவேப்பில்லை -1. தென்னை மரங்கள் எத்தனை ஆண்டு மரங்கள் என்றால் 10 வருடம். இந்த மரங்கள் முத்துகிருஷ்ணன் கிரயம் வாங்குவதற்கு முன்பே இருந்தது. முத்துகிருஷ்ணன் கிரயத்தில் இந்த மரங்களை பற்றி குறிப்பு உள்ளதா என்றால் நான் பார்க்கவில்லை. வழக்கு சொத்தில் வைக்கோல் போர் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கும் தெற்கே வைக்கோல் போர் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு சொத்தின் தெற்கே கட்டிடம் உள்ளதா என்றால் இல்லை. காலிமனையாக தான் உள்ளது.

10. மாதவ படையாட்சி இடத்திற்கும் வழக்கு சொத்திற்கும் இடையில் வேலி எதுவும் கிடையாது என்றால் சரிதான். முத்துகிருஷ்ணனுக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram